

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம்

## 07

## வாக்கியம் அமைத்தல்

M.K.M.Fazlullah (B.A, PGDE, N.Dip in Teach, MT-OUSL) TAMIL 0772242863

# வாக்கியம் அமைத்தல் என்றால் என்ன?

வாக்கியம் அமைத்தல் என்பது வாக்கிய உறுப்புகளை முறையாக இணைத்து பொருள் தரும் வகையில் வாக்கியங்களை அமைத்தல் ஆகும்.

: கமலினி பத்திரிகை படித்தாள்.

: இராமன் வந்தான்.

: ஆறானது மலைநாட்டைக் கடந்து வந்தது.

: மாணவர்கள் பாடத்தைப் படித்தனர்.

# ஒரு வாக்கியத்தின் உறுப்புகளாவன.

01. எழுவாய்

02. பயனிலை

03. செயப்படுபொருள்

: கமலினி பத்திரிகை படித்தாள்.

: இராமன் வந்தான்.

: ஆறானது மலைநாட்டைக் கடந்து வந்தது.

: மாணவர்கள் பாடத்தைப் படித்தனர்.

வாக்கியமும்
திணை, பால், எண், இடம், காலமும்

# திணை

## உயர்திணை

மனிதன் நற்பண்புகளைக் கொண்டவன்.

## அஃறிணை

மாடு புல்லை உண்டது.

# பால்

## ஆண்பால்

அவன் பாடம் படித்தான்.

## பெண்பால்

அவள் பாடம் படித்தாள்.

## பலர்ப்பால்

அவர்கள் பாடம் படித்தனர்.

## ஒன்றன்பால்

அது தானியத்தை உண்டது.

## பலவின்பால்

அவை தானியத்தை உண்டன.

எண்

ஒருமை

மாணவன் காணொலியைக் கண்டு மகிழ்ந்தான்.

பன்மை

மாணவர்கள் காணொலியைக் கண்டு மகிழ்ந்தனர்.

# இடம்

## தன்மை

நான் வீட்டைக் கட்டினேன்.

## முன்னிலை

நீ வீட்டைக் கட்டினாய்.

## படர்க்கை

அவள் வீட்டைக் கட்டினாள்.
அவன் வீட்டைக் கட்டினான்.
அது கூட்டைக் கட்டியது.
அவை கூட்டைக் கட்டின.

காலம்

இறந்தகாலம்

பறவை பழத்தைத் தின்றது.

நிகழ்காலம்

பறவை பழத்தைத் தின்னுகிறது.

எதிர்காலம்

பறவை பழத்தைத் தின்னும்.

நன்றி

வணக்கம்